# கே.பாலமுருகன் வழிகாட்டல்: விவாதக் கட்டுரை

## தலைப்பு: செல்லிடப்பேசியின் விளைவுகளை விவாதித்து எழுதுக

**முன்னுரை**

இன்றைய 21ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த தகவல் தொடர்புத் தொழிட்நுட்பக் கண்டுபிடிப்பாக ‘செல்லிடப்பேசியை’ அடையாளப்படுத்தலாம். ‘லெனோவா’, ‘வீவோ’ என மேலும் பலவகையான செல்லிடப்பேசிகள் புதிய தொழிட்நுட்பத் திறன்களோடு வடிவமைக்கப்பட்டு உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருகின்றன. இத்தகைய நவீன கண்டுபிடிப்பால் நன்மையும் தீமையும் ஏற்படவே செய்கின்றன.

**கருத்து 1**

செல்லிடப்பேசியின் வாயிலாக பலவிதமான மாதக்கட்டணங்களைச் செலுத்த முடியும். **‘ப்ளேய் ஸ்டோர்’ சேவையின்** மூலமாக நமக்கு உதவியாக இருக்கக்கூடிய வங்கி இணைப்புகளைத் தரவிறக்கம் செய்து செல்லிடப்பேசியில் வைத்துக் கொள்ள முடியும். இதன் வழியாக ஆஸ்ட்ரோ, நீர், மின்சாரம் போன்ற பல நூறு வகையான சேவைக்கான மாதக்கட்டணங்களை உடனுக்குடன் இருந்த இடத்திலேயே செலுத்த முடிகிறது. இதன் மூலம் நேரத்தையும் சக்தியையும்கூட சிக்கனப்படுத்த முடியும்.

**கருத்து 2**

அதோடுமட்டுமல்லாமல் செல்லிடப்பேசியின் மூலமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். **மெய்நிகர் கற்றல்** சேவையை உடனுக்குடன் செல்லிடப்பேசியின் வாயிலாகப் பயன்படுத்தி பாடத்தை நடத்த முடியும். மேலும், கற்றல் கற்பித்தலுக்கான தகவல் சேகரிக்கவும் செல்லிடப்பேசியை ஒரு பயிற்றுத்துணைப்பொருளாகப் பயன்படுத்த முடியும்.

**கருத்து 3**

நன்மையோடு மட்டுமல்லாமல் திறன் செல்லிடப்பேசியால் தீமைகளும் விளைகின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலரும் செல்லிடப்பேசியை அதிகம் பயன்படுத்துகிறார்கள். செல்லிடப்பேசிகளின் ஒலிக் கம்பிகளிலிருந்து வெளியாகும் நுண்ணலைக் கதிர்வீச்சுகள்



LIVEWORKSHEETS

பயனீட்டாளர்களின் மூளையைப் பாதிக்கின்றன. இதனால், மூளை புற்றுநோய், வலிப்பு ஆகிய பாதிப்புகளும் ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

**கருத்து 4**

மேலும், சிறுவர்கள் செல்லிடப்பேசியில் இருக்கும் 'வீடியோ விளையாட்டுகளை' அதிகம் விளையாடுவதால் படிப்பில் பின்தங்கி விடுகிறார்கள். அதிக நேரம் வீட்டில் அவர்கள் செல்லிடப்பேசியில் இருக்கும் பற்பல 'வீடியோ விளையாட்டுகளில்' கவனம் செலுத்துவதால் மீள்பார்வை செய்யத் தவறிவிடுகிறார்கள். சிறுவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டாததனால் தேர்வில் சிறந்த தேர்ச்சியைப் பெற முடியாமல் தொய்வடைகிறார்கள்.

**முடிவுரை**

எனவே, செல்லிடப்பேசி இன்றைய நூற்றாண்டின் மிகச் சிறந்த தொழில்நுட்பத் தொடர்பு சாதனமாகக் கருதப்பட்டாலும் அவற்றுள் நன்மைகளும் தீமைகளும் அடங்கியுள்ளன என்பதை நாம் உணர வேண்டும். 'குறை நிறை'களை அடையாளம் கண்டு அதற்கேற்ப செயல்பட்டால் வெற்றிமிக்க ஒரு தலைமுறையை உருவாக்க முடியும்.

**ஆக்கம்: ஆசிரியர் திரு.கே.பாலமுருகன்**

**குறிப்பு:** இதுபோன்ற தலைப்புகள் தரமிக்க கருத்துகளையும் நடப்பிற்கேற்ற தகவல்களையும் கொண்டிருக்க வேண்டும். ஆகவே, இதுபோன்ற தலைப்புகளுக்கு ஏற்ற பொது அறிவை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டிய நிலை உள்ளது. மாணவர்களிடம் வலியுறுத்தவும்.

செல்லிடப்பேசி – Smart phone

பயிற்றுத்துணைப்பொருள் – Teaching Aids

மெய்நிகர் கற்றல்- VLE Frog

'ப்ளேய் ஸ்டோர்'- Play Store



LIVEWORKSHEETS